சுருக்கம்

கூட்டுறவுத் துறை – மானியக் கோரிக்கை – அறிவிப்புகள் 2014–2015 – பெரம்பலூர் மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி நகரக் கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்று துவக்குவதற்கு துறை ரீதியான நிர்வாக அனுமதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களுக்கு அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிப்பி2) துறை

அரசாணை (நிலை) எண்.31 நாள் 25.02.2015

ஜெய வருடம், மாசி 13

திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது:

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.39194/2014/நவ1, நாள் 14.8.2014, 7.10.2014 மற்றும் 12.2.2015.

---

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கடிதங்களில், பெரம்பலூர் மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி நகர கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றினை துவக்குவதற்கு அனுமதி கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. 2014–2015–ஆம் ஆண்டின் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின்போது, பெரம்பலூர் மாவட்டத்தில் வசிக்கும் மக்களுக்கு நகர கூட்டுறவு வங்கியின் சேவையை அளிக்கும் வகையில் திருச்சிராப்பள்ளி நகரக் கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றினை பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.10 இலட்சம் செலவில் துவக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

3. மேலே படிக்கப்பட்ட கடிதங்களின் மூலமாக வரப்பெற்ற கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கருத்துருவில் கீழ்க்காணும் விவரங்களை தெரிவித்துள்ளார்:–

திருச்சிராப்பள்ளி நகரக் கூட்டுறவு வங்கியின் கிளையை பெரம்பலூர் மாவட்டத்தில் துவக்க முன்மொழிவு திருச்சிராப்பள்ளி மண்டல இணைப்பதிவாளரால் 22.07.2014 அன்று இந்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி நகரக் கூட்டுறவு வங்கி 27.03.1913ல் பதிவு செய்யப்பட்டு, 18.04.1913 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது

இவ்வங்கி 4 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. 31.3.2014இல் இவ்வங்கியின் வைப்புகள் நிலுவை ரூ.74.03 கோடி, கடன்கள் நிலுவை ரூ.66.74 கோடி உள்ளது. 31.3.2013இல் இவ்வங்கி ரூ.45.71 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில், மேற்படி நகரக் கூட்டுறவு வங்கியின் கிளையைத் திறப்பதால் நகரக் கூட்டுறவு வங்கியின் சேவை பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள மக்களுக்கு அளிக்க ஏதுவாக இருப்பதோடு, தமிழ்நாட்டில் நகரக் கூட்டுறவு வங்கியின் கிளைகள் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் நிலை உருவாகும். அதனால் அனைத்து அரசு திட்டங்களும் எல்லா மாவட்ட மக்களையும் சென்றடையும். திருச்சிராப்பள்ளி நகரக் கூட்டுறவு வங்கியின் கிளையை பெரம்பலூர் மாவட்டத்தில் துவக்கிட இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து செயல் எல்லையை விரிவுபடுத்திட அனுமதி கிடைத்தவுடன் இடம் தெரிவு செய்யப்படும். புதிய கிளை துவக்குவதற்கான செலவினம் ரூ.10 இலட்சம் வங்கியின் சொந்த நிதியிலிருந்து செலவிடப்படும் இத்தொகை எதிர்வரும் 5 ஆண்டுகளில் வங்கி ஈட்டும் இலாபத்திலிருந்து ஈடு செய்யப்படும். நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அவற்றின் கிளைகளில் மையவங்கியியல் கணினி சேவையினை (Core Banking Solutions) அறிமுகப்படுத்துதல் தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நடைமுறை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் அளவில் முடிவுபெறாமல் நிலுவையில் உள்ளதால், திருச்சிராப்பள்ளி நகரக் கூட்டுறவு வங்கியின் கிளையை பெரம்பலூர் மாவட்டத்தில் துவக்கிட இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து செயல் எல்லையை விரிவுபடுத்திட அனுமதி கிடைக்கப்பெறவில்லை. எனவே, நகரக் கூட்டுறவு வங்கியின் சேவை அனைத்து மாவட்டங்களிலும் கிடைக்கவும், 2014–2015–ஆம் ஆண்டின் கூட்டுறவு துறையின் மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்திடவும் ஏதுவாக, பெரம்பலூர் மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி நகரக் கூட்டுறவு வங்கியின் கிளையை துவக்குவதற்கு தக்க ஆணை வழங்குமாறு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அரசிடம் கோரியுள்ளார்.

4. இச்சூழ்நிலையில், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அவற்றின் கிளைகளில் மையவங்கியியல் கணினி சேவையினை (Core Banking Solutions) அறிமுகப்படுத்துதல் தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நடைமுறை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் அளவில் முடிவுபெறாமல் நிலுவையில் உள்ளதால், திருச்சிராப்பள்ளி நகரக் கூட்டுறவு வங்கியின் கிளையை பெரம்பலூர் மாவட்டத்தில் துவக்கிட இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து செயல் எல்லையை விரிவுபடுத்திட அனுமதி கிடைக்கப்பெறவில்லை என்று கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

5. மேலே பத்தி 3–ல் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு, நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அவற்றின் கிளைகளில் மையவங்கியியல் கணினி சேவையினை (Core Banking Solutions) அறிமுகப்படுத்துதல் தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நடைமுறை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் அளவில் முடிவுபெறாமல் நிலுவையில் உள்ளதால், திருச்சிராப்பள்ளி நகரக் கூட்டுறவு வங்கியின் கிளையை பெரம்பலூர் மாவட்டத்தில் துவக்கிட இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து செயல் எல்லையை விரிவுபடுத்திட அனுமதி கிடைக்கப்பெறாத நிலையில்,

பெரம்பலூர் மாவட்டத்தில், திருச்சிராப்பள்ளி நகரக் கூட்டுறவு வங்கியின் கிளையைத் துவக்கிட துறைரீதியான நிர்வாக அனுமதியை கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு வழங்கலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகம்மது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.

நகல்:-
மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜி) துறை,
சென்னை–9.
இருப்பு கோப்பு/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பா. ராஜலட்சுமி
பிரிவு அலுவலர்.
27.2.15